# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1420/4 - 2005 නොවැම්බර් 21 වැනි සඳුදා - 2005.11.21

*1420/4 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ.11/80* (ii)

**1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் நியதிகளின்படி உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

நிமல் சிறிபால த சில்வா,
சுகாதார, போஷணை மற்றும் ஊவா வெல்லஸ்ஸ
அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2005, நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் உணவு (போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ் செய்யப்பட்ட நீர்) ஒழுங்குவிதிகள் 2005 என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், இவ்வொழுங்குவிதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் திகதியிலிருந்து ஆறு மாத காலப்பகுதியொன்று முடிவுறுவதன் மேல் பயனுடையதாதலும் வேண்டும்.

**பாகம் I**

*பொது ஏற்பாடுகள்*

2. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள், போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட இயற்கையான கனிப்பொருள் நீருக்கும் மற்றும் போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட குடிநீருக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. (1) ஆளெவரும், பிரதான உணவு அதிகாரியிடமிருந்து அதற்கென ஒரு பதிவுச் சான்றிதழைப் பெறாமல் –

(அ) இயற்கையான கனிப்பொருள் நீரை அல்லது குடிநீரைப் போத்தலிடைத்தலோ அல்லது சிப்பஞ்செய்தலோ ஆகாது ; அல்லது

(ஆ) போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட இயற்கையான கனிப்பொருள் நீரை அல்லது குடிநீரை இறக்குமதி செய்து விநியோகித்தலாகாது.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழைப் பெறுவதற்கான விண்ணப்பங்கள், பொருளளவில் இவ்வொழுங்குவிதிகளுக்கான Iஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் பிரதான உணவு அதிகாரிக்குச் செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் பதிவுச் சான்றிதழைப் பெறுவதற்காகப் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைகளைக் கவனத்துட் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(3) எந்த விண்ணப்பகாரர்களின் விண்ணப்பங்கள், போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட இயற்கையான கனிப்பொருள் நீரை அல்லது குடிநீரை இறக்குமதி செய்தலும் விநியோகித்தலும் தொடர்பானவையாக இருக்கின்றனவோ, அந்த விண்ணப்பகாரர்கள், அத்தகைய விண்ணப்பத்துடன் சேர்த்து, (4) ஆம் பந்தியின் நோக்கங்களுக்காக, அவ்விண்ணப்பமானது எந்த இயற்கையான கனிப்பொருள் நீர் அல்லது குடிநீர் அல்லது குடிநீர் தொடர்பில் செய்யப்படுகின்றதோ அந்தக் கனிப்பொருள் நீரில் அல்லது குடிநீரின் மாதிரிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) ஆளெவரும், எவையேனும் வளவுகளை, அத்தகைய வளவுகள் பிரதான உணவு அதிகாரியிடம் பதிவு செய்யப்பட்டிருந்தாலொழிய, இயற்கையான கனிப்பொருள் நீரை அல்லது குடிநீரைப் போத்தலிலடைப்பதற்காக அல்லது சிப்பஞ்செய்வதற்காகப் பயன்படுத்துதலாகாதென்பதுடன், அத்தகைய நோக்கத்துக்காகத் தேவைப்படுத்தப்பட்ட படிவங்கள், பொருளளவில் இவ்வொழுங்குவிதிகளுக்கான II ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு இருத்தலும் வேண்டும்.

(5) பிரதான உணவு அதிகாரி, விண்ணப்பமொன்று அவரினாற் பெறப்பட்டதிலிருந்து ஏழு வேலைநாட்காலப் பகுதியினுள், சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி உற்பத்திப் பொருளுக்குப் பதிவு வழங்கப்படலாமா அல்லவா என்பது பற்றிய விதப்புரையொன்றுக்காக, உணவுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ்த்தாபிக்கப்பட்ட உணவு ஆலோசனைக் குழுவினால் பிரதான உணவு அதிகாரிக்கு விதந்துரைக்கப்படுகின்றவாறாக, தேவைப்பட்ட துறையில் நிபுணத்துவம் வாய்ந்த ஏதேனும் நிறுவனத்துக்கு மாதிரிகளுடன் சேர்த்து அதனை அனுப்புதல் வேண்டும்.

(6) இறக்குமதி செய்யப்பட்ட ஓர் உற்பத்திப் பொருளின் விடயத்தில், விண்ணப்பகாரர், அவரது விண்ணப்பத்துடன் சேர்த்து, உற்பத்தியின் மாதிரியின் உள்ளீடு தொடர்பாக அங்கீகாரம்பெற்ற ஆய்வுகூடத்திடமிருந்தான பாதுகாப்புச் சான்றிதழொன்றுடன் சேர்த்து அத்தகைய மாதிரியைச் சமர்ப்பித்தல் வேண்டும். பிரதான உணவு அதிகாரி, விண்ணப்பமொன்று அவரினால் பெறப்பட்டதிலிருந்து ஏழு வேலை நாட்காலப்பகுதியினுள், சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி உற்பத்திப் பொருளுக்குப் பதிவு வழங்கப்படலாமா அல்லவா என்பது பற்றிய விதப்புரையொன்றுக்காக, உணவுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ்த்தாபிக்கப்பட்ட உணவு ஆலோசனைக் குழுவினால் பிரதான உணவு அதிகாரிக்கு விதந்துரைக்கப்படுகின்றவாறாக, தேவைப்பட்ட துறையில் நிபுணத்துவம் வாய்ந்த ஏதேனும் நிறுவனத்துக்கு மாதிரியுடனும் பகுப்பாய்வுச் சான்றிதழுடனும் சேர்த்து அதனை அனுப்புதல் வேண்டும்.

(7) பிரதான உணவு அதிகாரி, தொழில்நுட்ப அபிப்பிராயமொன்றுக்காக உற்பத்திப் பொருளானது எந்த இயைபான நிறுவனத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதோ அந்த நிறுவனத்திடமிருந்து அவருக்கு அறிக்கையொன்று அனுப்பப்படும்வரை, இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி இயற்கையான கனிப்பொருள் நீரை அல்லது குடிநீரைப்போத்தலிலடைப்பதற்காக அல்லது சிப்பஞ்செய்வதற்காக, அல்லது போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட இயற்கையான கனிப்பொருள் நீரை அல்லது குடிநீரை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்காகப் பதிவுச் சான்றிதழொன்றை எவரேனுமாளுக்கு வழங்குவதை முன்னெடுத்தலாகாது.

(8) மூன்றாம், ஆறாம் ஆம் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்டவாறாக மாதிரியைப் பெற்றதன்மேல், இயைபான நிறுவனம் -

(அ) குடிநீர் அல்லது கனிப்பொருள் நீர், அத்தகைய உற்பத்திப்பொருள் தொடர்பாகக் குறித்துரைக்கப்பட்ட செய்முறைகளுக்கிணங்க உற்பத்தி செய்யப்பட்டுள்ளதெனத் தன்னைத் திருப்திப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இவ்வொழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட மற்றெல்லாத் தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவெனத் தன்னைத் திருப்திப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

அத்துடன்பிரதான உணவு அதிகாரியினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட உற்பத்திப் பொருள் தொடர்பில் அறிக்கையொன்றின் வடிவத்தில் அதன் விதப்புரையை அனுப்புதலும் வேண்டும்.

(9) பிரதான உணவு அதிகாரி, அத்தகைய அறிக்கையைப் பெற்றதன்மேல், சொல்லப்பட்ட தகவல் அவருக்கு அறிவிக்கப்பட்டதிலிருந்து இருவாரக் காலப்பகுதியினுள், சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக விண்ணப்பதாரருக்குப் பதிவுச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும், அல்லது கூறப்பட்ட காரணங்களுக்காக விண்ணப்பகாரருக்குப் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படமுடியாதென அவருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(10) ஒன்பதாம் பந்தியின் கீழான முடிபினால் இன்னலுறும் ஆளொருவர், அத்தகைய மறுப்பு செய்யப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

4. ஆளெவரும், ஏதேனும் போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட இயற்கையான கனிப்பொருள் நீரை அல்லது போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட குடிநீரை, அத்தகைய உற்பத்திப்பொருள் பிரதான உணவு அதிகாரியினால் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டு இவ்வொழுங்குவிதியின் மேற்போந்த ஏற்பாடுகளின் நியதிகளின்படியான பதிவிலக்கமொன்று அதற்குக் குறித்தளிக்கப்பட்டிருந்தாலொழிய, விற்பனை செய்தலோ, விற்பனைக்கு முன்வைத்தலோ, விற்பனைக்கு வைத்திருத்தலோ, விற்பனைக்கெனக் கொண்டு செல்லுதலோ அல்லது விளம்பரப்படுத்துதலோ ஆகாது;-

## பாகம் II

### *போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட இயற்கையான கனிப்பொருள் நீர்*

5. (1) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக "இயற்கையான கனிப்பொருள் நீர்" என்பது, தரைக்கீழ் நீர்தாங்கும் நிலஅடுக்குப்படிவத்திலிருந்து தோன்றுகின்றதும், நீரூற்றுக்கள், கிணறுகள் அல்லது ஆள்துணைகள் போன்ற இயற்கையான அல்லது துளை செய்யப்பட்ட மூலங்களிலிருந்து மனித பாவனைக்கெனப் பிரித்தெடுக்கப்படுகின்றதுமான நீர் என்று பொருளாகும்.

(2) ஆளெவரும், (1) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட மூலங்கள் தவிர்ந்த வேறேதேனும் மூலத்திலிருந்து தோன்றுகின்ற அல்லது பிரித்தெடுக்கப்படுகின்ற இயற்கையான கனிப்பொருள் நீரைப் போத்தலிலடைத்தலோ அல்லது சிப்பஞ்செய்தலோ ஆகாது.

(3) போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட இயற்கையான கனிப்பொருள் நீர் இவ்வொழுங்குவிதிகளுக்கான III ஆம் அட்டவணை படிவம் "அ" என்பதில் குறித்துரைக்கப்பட்ட பௌதிக, இரசாயன மற்றும் நுண்ணுயிரியல்கள் தேவைப்பாடுகளுக் கியைபானதாகவிருத்தல் வேண்டும்.

6. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக, இயற்கையான கனிப்பொருள் நீர், போத்தலிலடைக்கப்படும் அல்லது சிப்பஞ்செய்யப்படும் நோக்கத்துக்காக பிரித்தெடுக்கப்படுவதன் மேல் –

(அ) அழுக்கு, புறத்துப்பொருள் அல்லது உடல்நலத்துக்கு ஊறுவிளைவிக்கின்ற வேறேதேனும் சேர்மானப்பொருள் என்பவற்றைக் கொண்டிருத்தலாகாது ;

(ஆ) மூலத்தூய்மைக்கு உத்தரவாதமளிக்கின்ற நிலைமைகளின் கீழ்ச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும் ;

(இ) விடயத்துக்கேற்ப, வடித்திருத்தல் மூலமும் வடிகட்டுதல் மூலமும் அல்லது வடித்திருத்தல் மூலம் அல்லது வடிகட்டுதல் மூலம் அத்துடன் அவசியமாயின், முன்னைய வாய்வூட்டப்பட்டமைமூலம் துரிதப்படுத்தப்படுதல் மூலம் பொருத்தமற்ற ஆக்கக்கூறுகளைத் தனிவேறாக்குதல் தவிர்ந்த வேறேதேனும் பரிகரிப்புக்கு உள்ளாக்கப்படுதலாகாது ;

(ஈ) 4 ஆம் ஒழுங்குவிதியில் தரப்பட்டுள்ளவாறு சுகாதார ரீதியிலான முற்காப்புக்களின்கீழ் மூலத்தின் தோற்றமுனைக்கு அண்மையில் போத்தலிலடைக்கப்படுதல் அல்லது சிப்பஞ்செய்யப்படுதல் வேண்டும் ;

(உ) சிப்பஞ்செய்யப்படுவதற்காகத் தொகைக் கொள்கலன்களில் இடம்பெயர்க்கப்படுதலாகாது. ஆயின், நீரின் தூய்மையைப் பேணுவதற்கு எல்லா முற்காப்புகளும் எடுக்கப்பட்டுள்ளனவெனப் பிரதான உணவு அதிகாரி திருப்திப்படின், நீர்க்குழாய் வழியான இடப்பெயர்வு அனுமதிக்கப்படலாம்.

7. (1) இயற்கையான கனிப்பொருள் நீரைப் போத்தலிலடைக்கின்ற அல்லது சிப்பஞ்செய்கின்ற ஆளொருவர் பிரித்தெடுக்கப்பட்டபின்னர், இயற்கையான கனிப்பொருள் நீர், இயற்கையான கனிப்பொருள் நீரைப் போத்தலிலடைத்தலில் அல்லது சிப்பஞ்செய்தலில் சுகாதார ரீதியிலான நிலைமைகள் பேணப்படுதவனை உறுதிப்படுத்துதலை இலக்காகக் கொண்டவாறான, கீழே குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கிணங்கப் போத்தலிலடைக்கப்படுவதனை அல்லது சிப்பஞ்செய்யப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும் ;–

(அ) இயற்கையான கனிப்பொருள் நீரின் இரசாயன, பௌதீக, நுண்ணுயிரியல்கள் தன்மைகளின் ஏதேனும் தீழ்ப்பாக்கலை அல்லது அவற்றின் மீதான வெளிப்புறத் தாக்கத்தைத் தவிர்ப்பதற்கு இயன்றனவாகவுள்ள எல்லா முற்காப்புகளும்

எடுக்கப்படுதல் வேண்டும். பக்றீரியா, வைரசுக்கள், உரங்கள், ஐதரோ காபன் பொருட்கள், பீடை கொல்லிகள், தூய்மையாக்கிகள், பீனோல் சேர்வைகள், நச்சு உலோகங்கள், கதிரியக்கப்பதார்த்தங்கள், மற்றும் வேறெவையேனும் கரையத்தக்க சேதனவுறுப்பு மற்றும் அசேதனவுறுப்புப் பதார்த்தங்கள் போன்ற தீழ்ப்பாக்கிகளாகவிருப்பதற்கு வாய்ப்புக் கொண்டவற்றுக்குக் குறிப்பிட்ட கவனஞ் செலுத்தப்படுதல் வேண்டும். மேற்பரப்புத் தீழ்ப்பாக்குதலுக்கெதிராகப் போதிய பாதுகாப்பை இயற்கையானது அளிக்கின்றவிடத்துங்கூட,சுரங்கந்தோண்டுதல், குழாய்வழி செல்லும் நீர் சார்ந்த மற்றும் எந்திரவியல் வசதிகள் போன்ற நிகழக்கூடிய தீங்குகள்பற்றிக் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) இயற்கையான கனிப்பொருள் நீரானது, இயற்கையான கனிப்பொருள் நீரல்லாத ஏதேனும் நீர் உட்பிரவேசிப்பதனைத் தடுப்பதற்கான அல்லது விசைக்குழாய் மூலம் நீரை மேலெழச் செய்யும் வசதிகள் இருப்பின், வழங்கலைக் குறைப்பதன் மூலம் ஏதேனும் வெளியிடத்திலிருந்தான நீர் உட்பிரவேசிப்பதனைத் தடுப்பதற்கான அத்தகையவொரு முறையில், நீரக மண்ணியல் நிபந்தனைகளுக்கியைய பெறப்படுதல் வேண்டும் ;

(இ) நீரேந்துப் பிரதேசங்களினுள் எத்தகையதுமான தீழ்ப்பாக்கலெதுவும் பிரவேசித்திருப்பதற்கு உத்தரவாதமளிப்ப தற்கென, நீரூற்றுக்கள் மற்றும் கிணறுகள் என்பவற்றின் உடனடிச் சுற்றாடல்களில் உரிமையாளர் பொருத்தமான முற்காப்பு வழிமுறைகளை எடுத்தல் வேண்டும் ;

(ஈ) இயற்கையான கனிப்பொருள் நீருடன் சம்பந்தப்படுபவையும், அதன் சேகரிப்புக்குப் பயன்படுத்தப்படுபவையுமான விசைக் குழாய்கள், நீர்க்குழாய்கள் அல்லது வேறு பயன்படுத்தப்படக்கூடிய உபாயங்கள், இயற்கையான கனிப் பொருள் நீரின் மூலத் தன்மைகளுக்கு உத்தரவாதமளிக்கின்ற அத்தகைய பொருளினால் ஆக்கப்படுவதனை உரிமையாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும் ;

(உ) பிரித்தெடுப்புப் பிரதேசத்தினுள் அதிகாரமளிக்கப்படாத ஆட்களை அனுமதித்தலாகாதென்பதுடன், இயற்கையான கனிப்பொருள் நீரைச் சேகரிப்பதனை இலக்காகக் கொண்டிராதவாறான, அத்தகைய பிரதேசத்தினுள்ளான வேறெவையேனும் செயற்பாடுகளைத் தடைசெய்தலும் வேண்டும் ; அத்துடன்

(ஊ) இயற்கையான கனிப்பொருள் நீரைப் பிரித்தெடுப்பதற்கு சுகாதார ரீதியிலான முறைகளும் நடவடிக்கைகளும் பேணப்படுதல் வேண்டும். அத்தகைய முறைகளும் நடவடிக்கை முறைகளும் மனிதர்களுக்கு நிகழக்கூடிய சுகாதாரத் தீங்காக அல்லது இயற்கையான கனிப்பொருள் நீரை மாசுபடுத்துகின்ற மூலமாக இருத்தலாகாது. பிரித்தெடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் சாதனங்கள், மனித உடல்நலத்துக்கு ஏற்படக்கூடிய எல்லாத் தீங்குகளையும் கூடியளவு குறைப்பதற்கெனவும் மாசுப்படுத்தலைத் தடுப்பதற்கெனவும் நிர்மாணிக்கப்பட்டுப் பேணப்படுதல் வேண்டும்.

(2) முதலாம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட சுகாதார ரீதியிலான தேவைப்பாடுகளுடன் சேர்த்து மேலதிகமாக, 1989 ஆம் ஆண்டு யூன் மாதம் 2 ஆந் திகதிய 560/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1988 ஆம் ஆண்டின் உணவு ஒழுங்குவிதிகளிலுள்ள சுகாதார ரீதியிலான தேவைப்பாடுகள், போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட இயற்கையான கனிப்பொருள் நீரின் உற்பத்தி தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

8. போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட இயற்கையான கனிப்பொருள் நீரை உற்பத்தி செய்கின்ற ஆளொருவர், கீழே குறித்துரைக்கப்பட்ட சிப்பஞ்செய்தல், சுட்டுத்துண்டிடுதல் தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுகுதல் வேண்டும் ;–

(அ) பதனிடுதலும் சிப்பஞ்செய்தலும் அந்நோக்கத்துக்காகப் பதிவு செய்யப்பட்ட வளவுகளில் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும் ;

(ஆ) நீர் கலப்படம் செய்யப்படும் அல்லது மாசுபடுத்தப்படும் வாய்ப்பைத் தடுப்பதற்குப் பொருத்தமான,காற்று இடையே புகாமல் முத்திரையிடப்பட்ட துப்புரவான உணவுத்தரத்திலான சில்லறைக் கொள்கலன்களில் சிப்பஞ்செய்யப்படுதல் வேண்டும். அது கண்டிப்பான சுகாதார ரீதியிலான நிலைமைகளின் கீழ்ச் சிப்பஞ்செய்யப்படுதல் வேண்டும் ;

(இ) உணவு (சுட்டுத்துண்டிதலும் விளம்பரப்படுத்தலும்) ஒழுங்குவிதிகள் 2005 இன் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் ;

(ஈ) "இயற்கையான கனிப்பொருள் நீர்" என்ற பொதுப்பெயர் சுட்டுத்துண்டில் பயன்படுத்தப்படுதல் வேண்டும் ;

(உ) இயற்கையான கனிப்பொருள் நீரைப் பயன்படுத்துகின்ற பாவனையாளரொருவரினால் பெறப்படக்கூடிய மருத்துவ அல்லது வேறு நன்மைகள் தொடர்பில் சுட்டுத்துண்டில் அல்லது போத்தலில் அல்லது சிப்பத்தில் எதுவும் அச்சிடப்படுதலோ அல்லது வெளியிடப்படுதலோ ஆகாது ;

(ஊ) இயற்கையான கனிப்பொருள் நீரின் தன்மை, மூலம் அமைப்பு மற்றும் பண்புகள் பற்றிப் பொதுமக்களின் மனதுகளில் மயக்கத்தை உருவாக்கக்கூடிய அல்லது எவ்வகையிலும் பொதுமக்களைப் பிழையாக வழிநடாத்தக்கூடிய ஏதேனும் கூற்றை அல்லது ஏதேனும் சித்திரவடிவிலான உபாயத்தைச் சுட்டுத்துண்டில் அல்லது போத்தலில் அல்லது சிப்பத்தில் அச்சிடுதலோ அல்லது வெளியிடுதலோ ஆகாது ;

(எ) பிரதான உணவு அதிகாரியினால் குறித்தொதுக்கப்பட்ட பதிவிலக்கமானது, துலாம்பரமானவொரு, முறையில், சுட்டுத்துண்டில் அச்சிடப்படுதல் வேண்டும்.

## பாகம் III

### *போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட குடிநீர்*

9. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக, "போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட குடிநீர்" என்பது, மனித பாவனைக்குத் தயாராகப் போத்தல்களில் (கொள்கலன்களில்) முத்திரையிடப்பட்ட நீர் என்று பொருளாகும் ; ஆனால் அவ்வொழுங்குவிதிகளின் II ஆம் பாகத்தில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான இயற்கையான கனிப்பொருள் நீரை உள்ளடக்குதலாகாது.

10. போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட குடிநீர், இயற்கையாக உள்ளதாயுள்ள அல்லது வேண்டுமென்று சேர்க்கப்பட்ட கனிப்பொருள்களையும் மற்றும் காபனீரொட்சைட்டையும் கொண்டிருக்கலாம், ஆனால் சீனிகள், இனிப்பூட்டிகள், நறுமணங்கள் அல்லது வேறு உணவுச் சேர்பொருட்களைக் கொண்டிருத்தலாகாது.

11. போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட குடிநீர், இவ் வொழுங்குவிதிகளுக்கான III ஆம் அட்டவணையின் படிவம் "ஆ" என்பதில் குறித்துரைக்கப்பட்ட பௌதீக, இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

12. (1) அத்தகைய நோக்கத்துக்காகக் குறிப்பிட்ட சூழல்சார் தோற்றுவாயிலிருந்தான நீரைப் பயன்படுத்தி போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட குடிநீரை உற்பத்திசெய்கின்ற ஆளொருவர், அத்தகைய சூழல்சார் தோற்றுவாயைப் பிரதான உணவு அதிகாரியிடம் பதிவுசெய்தல் வேண்டும்.

(2) முதலாம் பந்தியின்கீழ் சூழல்சார் தோற்றுவாயொன்றைப் பதிவுசெய்கின்ற ஆளொருவர், அவ்வாறு பதிவுசெய்யப்பட்ட குறிப்பிட்ட நீர்த் தோற்றுவாய் தவிர்ந்த வேறேதேனும் தோற்றுவாயிலிருந்து பெறப்பட்ட நீரை, போத்தலிலடைப்பதற்காக அல்லது சிப்பஞ்செய்வதற்காகப் பயன்படுத்தலாகாது.

(3) உள்ளூரதிகார சபையொன்றினால் அல்லது வேறு ஒழுங்கமைப்பொன்றினால் முகாமை செய்யப்பட்ட சமுதாய நீர் முறைமையைப் பயன்படுத்திக் குடிநீரைப் போத்தலிலடைக்கின்ற அல்லது சிப்பஞ்செய்கின்ற ஆளொருவர், அத்தகைய நீர்த் தோற்றுவாயைப் பிரதான உணவு அதிகாரியிடம் பதிவு செய்தல் வேண்டும்.

(4) பந்தி (3) இன் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர், அப்பந்தியின் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட நீர்த் தோற்றுவாய் தவிர்ந்த வேறேதேனும் தோற்றுவாயிலிருந்தான நீரை, குடிநீராகப் போத்தலிலடைப்பதற்காக அல்லது சிப்பஞ்செய்வதற்காகப் பயன்படுத்தலாகாது.

13. (1) போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட குடிநீரைப் போத்தலிலடைக்கின்ற அல்லது சிப்பஞ்செய்கின்ற ஆளொருவர், பிரித்தெடுக்கப்பட்ட பின்னர் போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட குடிநீர், போத்தலிலடைக்கப்பட்ட

அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட குடிநீரைப் போத்தலிலடைப்பதில் அல்லது சிப்பஞ்செய்வதில் சுகாதார ரீதியிலான நிலைமைகளைப் பேணுதலை உறுதிப்படுத்துவதனை இலக்காக்கொண்டவாறான, கீழே குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கிணங்கப் போத்தலிலடைக்கப்படுதல் அல்லது சிப்பஞ்செய்யப்படுதல் வேண்டும் :-

(அ) நிலத்தடி நீர்த்தோற்றுவாயின் தரத்தினது ஏதேனும் தீழ்ப்பாக்கலை அல்லது அதன்மீதான வெளிப்புறத் தாக்கத்தைத் தவிர்ப்பதற்குப் பாதுகாக்கப்பட்ட சுற்றளவுகளினுள் இயன்றளவிலான எல்லா முற்காப்புக்களும் எடுக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) பிரித்தெடுத்தல் வசதிகளைப் பேணுவதற்கான முறைக்ளும் நடவடிக்கை முறைகளும் சுகாதார ரீதியிலானவையாக இருத்தல் வேண்டுமென்பதுடன், மனிதருக்குத் தீங்குவிளைவிக்கும் வாய்ப்புடையதாகவிருத்தலோ அல்லது நிலத்தடிநீர்த் தோற்றுவாயை மாசுபடுத்துவதற்கு ஏதுவாக இருத்தலோ ஆகாது ;

(இ) நீரைக் களஞ்சியப்படுத்தலும் பிரித்தெடுக்கும் முறையிலிருந்து பதனிடும் பொறித்தொகுதிக்கு நீரை இடம்பெயர்த்தலும், மூலநீர் நுண் உயிரினங்களினால் அல்லது வேறெவையேனும் மாசுபடுத்திகளினால் மாசுபடுத்தப்படுவதனைத் தடுப்பதற்குச் சுகாதார ரீதியிலானவொரு முறையில் நடாத்தப்படுதல் வேண்டும் ;

(ஈ) 1989, யூன் 2 ஆந் தேதிய 560/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1988 ஆம் ஆண்டின் உணவு ஒழுங்கு விதிகளிற் குறித்துரைக்கப்பட்ட சுகாதார ரீதியிலான தேவைப்பாடுகள், போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட குடிநீருக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(உ) (i) நுண்ணங்கிகளின் வளர்ச்சியைக் குறைப்பதற்கு, அகற்றுவதற்கு அல்லது தடுப்பதற்குப் பதனிடுகையின்போது நீருக்குப் பிரயோகிக்கப்படவேண்டிய பரிகரிப்புக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம் :-

(அ) (1) உயர் வெப்பம் ;

(2) புற ஊதாக் கதிரியக்கம் ;

(3) வடிகட்டுதல்,

போன்ற பௌதீகப் பரிகரிப்பு ;

(ஆ) (1) குளோரினேற்றுதல்

(2) ஓசோனேற்றுதல், அத்துடன்

(3) காபனேற்றுதல்,

போன்ற இரசாயனப் பரிகரிப்பு ;

(ii) உட்பந்தி (I) இல் குறித்துரைக்கப்பட்ட பரிகரிப்புகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ பயன்படுத்தப்படலாம்;

(ஊ) நீரிலிருந்து இரசாயனச் சேர்வுப்பொருட்களை அகற்றுவதற்கு அல்லது குறைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட நீருக்குப் பிரயோகிக்கப்படவேண்டிய பரிகரிப்பு பின்வருவனவற்றை உள்ளடக்கலாம் :-

(i) குறிப்பிட்ட (பொறிமுறையான) வடிகட்டுதல் ;

(ii) மணல் அல்லது அமுத்தப்பட்ட நார் வடிகட்டிகள் போன்ற ஆழமான வடிகட்டிகள் ;

(iii) கெட்டித்தாள், வடிகட்டிகள் ;

(iv) மடிக்கப்பட்ட தாள்சுருள் வடிகட்டிகள் போன்ற மேற்பரப்பு வடிகட்டிகள் ;

(v) தூண்டப்பட்ட காபன் வடிகட்டிகள் ;

(vi) வாயுவூட்டல் ;

(vii) கனிப்பொருள் அகற்றுகை -அயன் அகற்றுதலும் அல்லது நீர் மென்மையாக்குதலும் ;

(எ) நீரின் பரிகரிப்பில் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள் அல்லது சேர்வுப் பொருட்கள், தீங்குவிளைவிக்கும் பதார்த்தங்கள் எவையும் நீரினுட் செல்லாத வகையில் நல்ல தரத்தினதாகவிருத்தல் வேண்டும். பொருத்தமானவிடத்து, அடிப்படைச் சேர்வுப்பொருட்களுக்கான அளவுக்குறிப்பீடுகள் அடையாளங் காணப்பட்டு பிரயோகிக்கப்படுதல்

வேண்டுமென்பதுடன், பயன்பாட்டுக்கான தகுதியை நிலைநாட்டுவதற்கென ஆய்வுகூடச் சோதனை நிறைவேற்றப்படுதலும் வேண்டும் ;

(ஏ) போத்தலிலடைக்கும் தொழிற்பாடுகள், மூடப்பட்ட இடமொன்றில் நடாத்தப்படுதல் வேண்டும். அங்குள்ள காற்றானது, தூசு மற்றும் நுண்ணங்கிகள் அற்றதகா இருத்தல் வேண்டும்.

14. போத்தலிலடைக்கப்பட்ட அல்லது சிப்பஞ்செய்யப்பட்ட குடிநீரை உற்பத்தி செய்கின்ற ஆளொருவர், கீழே குறித்துரைக்கப்பட்ட சிப்பஞ்செய்தல், சுட்டுத்துண்டிடுதல் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் :-

(அ) பதனிடுதலும் சிப்பஞ்செய்தலும் அந்நோக்கத்துக்காகப் பதிவு செய்யப்பட்ட வளவுகளில் கொண்டுநடாத்தப்படுதல் வேண்டும் ;

(ஆ) நீர் கலப்படம் செய்யப்படும் அல்லது மாசுபடுத்தப்படும் வாய்ப்பைத் தடுப்பதற்குப் பொருத்தமான, காற்று இடையே புகாமல் முத்திரையிடப்பட்ட தூய்மையான உணவுத்தரத்திலான சில்லறைக் கொள்கலன்களில் சிப்பஞ்செய்யப்படுதல் வேண்டும். அது கண்டிப்பான சுகாதார ரீதியிலான நிலைமைகளின்கீழ் சிப்பஞ்செய்யப்படுதல் வேண்டும் ;

(இ) உணவு (சுட்டுத் துண்டிடுதலும் விளம்பரப்படுத்துதலும்) ஒழுங்குவிதிகள் 2005 இன் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் ;

(ஈ) "குடிநீர்" என்ற பொதுப்பெயர் சுட்டுத்துண்டில் பயன்படுத்தப்படுதல் வேண்டும் ;

(உ) குடிநீரைப் பயன்படுத்துகின்ற ஒரு பாவனையாளரினால் பெறப்படக்கூடிய மருத்துவ அல்லது வேறு நன்மைகள் தொடர்பில் சுட்டுத் துண்டிலோ அல்லது போத்தலிலோ அல்லது சிப்பத்திலோ எதுவும் அச்சிடப்படுதலோ அல்லது வெளியிடப்படுதலோ ஆகாது ;

(ஊ) குடிநீரின் தன்மை, தோற்றுவாய், அமைப்பு மற்றும் பண்புகள் பற்றிப் பொதுமக்களின் மனங்களில் மயக்கத்தை உருவாக்கக்கூடிய அல்லது எவ்வகையிலும் பொதுமக்களைப் பிழையாக வழிநடாத்தக்கூடிய ஏதேனும் கூற்றையோ அல்லது ஏதேனும் சித்திரவடிவிலான உபாயத்தையோ சுட்டுத்துண்டில் அல்லது போத்தலில் அல்லது சிப்பத்தில் அச்சிடுதலோ அல்லது வெளியிடுதலோ ஆகாது ;

(எ) பிரதான உணவு அதிகாரியினால் குறித்தொதுக்கப்பட்ட பதிவிலக்கமானது, துலாம்பரமானதொரு முறையில் சுட்டுத்துண்டில் அச்சிடப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

### பொருள்கோடல்

15. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக –

"பிரதான உணவு அதிகாரி" என்பது, 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்ட வாறான சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் என்று பொருளாகும் ; அத்துடன்

"உற்பத்தி செய்தல்" என்பது, 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தில் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட வாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## அட்டவணை I

(ஒழுங்குவிதி 3 (2))

போத்தலிலடைக்கப்பட்ட (சிப்பஞ்செய்யப்பட்ட) இயற்கையான கனிப்பொருள் நீரையும் போத்தலிலடைக்கப்பட்ட (சிப்பஞ்செய்யப்பட்ட) குடிநீரையும் உற்பத்தி செய்வதற்கான வளவுகளைப் பதிவுசெய்வதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம்

| | |
|---|---|
| 1. எந்த உற்பத்திக் கூறுக்காகப் பதிவு விண்ணப்பிக்கப்படுகின்றதோ அந்த உற்பத்திக் கூறு : | |
| 2. பதிவுசெய்யப்படவேண்டிய வளவுகளின் முழு முகவரி (வீட்டிலக்கம், வட்டார இல., வீதி இல., வீதி, எல்லைகள் என்பவற்றுடன்) உருவரையை இணைக்கவும். | |
| 3. உற்பத்தி செய்யப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படுவதற்கு உத்தேசிக்கப் படும் உணவுப் பொருளின் தன்மை : | போத்தலிலடைக்கப்பட்ட (சிப்பஞ்செய்யப் பட்டகுடிநீர் / போத்தலிலடைக்கப்பட்ட (சிப்பஞ் செய்யப்பட்ட) இயற்கையான கனிப்பொருள்நீர் (பொருத்தமற்றதை கீறி விடவும்) |
| 4. குழுமத்தின் தன்மை - பகிரங்கமானதா : பிறைவேட் லிமிட்டெட், பங்காண் மையா அல்லது உரிமையாண்மை முயற்சியா, முகாமைப் பணிப்பாளரி னதும் தொழினுட்பப் பணிப்பாளரினதும் (எவரேனுமிருப்பின்)/(விடயத்துக் கேற்ப) பங்காளிகளின்/உரிமையாளரின் பெயருடனும் முகவரியுடனும் | |
| 5. பதிவுக்காக விண்ணப்பிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் பெயரும் முகவரியும் குழுமத்தில் அவரினால் வ கிக்கப்படும் பதவியும் : | |
| 6. உற்பத்திப் பொருளின் வணிகப் பெயர் : | |
| 7. முன்னைய பதிவு ஏதேனுமிருப்பின் அதன் இலக்கமும் தேதியும் : | |
| 8. பதிவுக்கட்டணமாக அனுப்பப்பட்ட தொகை பற்றிய விபரங்கள் : | ரூபா :.......................<br>பற்றுச்சீட்டில. :...................<br>தேதி :..................... |
| 9. இ. நி. நி. அத்தாட்சிப்படுத்துகை<br>(i) உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள் (அளிப்பின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)<br>(ii) இறக்குமதிசெய்யப்பட்ட உற்பத்திப் பொருட்கள் :<br>(இலங்கை நியமங்கள் நிறுவனத்தினாலான விதப்புரையின் மூலக் கடிதம் இணைக்கப்படுதல் வேண்டும்) | இநிநி. இல. :<br>திகதி : |

பதிவுக்குத் தேவைப்பட்ட அவசியமான எல்லா ஆவணங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

மேலே கொடுத்துதவப்பட்டுள்ள தகவல், எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானதும் சரியானதுமாகவுள்ளது.

...........................................
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

## அட்டவணை II

(ஒழுங்குவிதி 3 (4) )

**பதிவின் மாதிரிச் சான்றிதழ்**

போத்தலிலடைக்கப்பட்ட (சிப்பஞ்செய்யப்பட்ட) இயற்கையான கனிப்பொருள் நீரை / போத்தலிலடைக்கப்பட்ட சிப்பஞ்செய்யப்பட்ட) குடிநீரை உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்குமான வளவுகளைப் பதிவுசெய்தல்

பதிவில. :..................

1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கீழே குறிப்பிடப்பட்ட வளவுகள், போத்தலிலடைக்கப்பட்ட (சிப்பஞ்செய்யப்பட்ட) குடிநீரை/போத்தலிலடைக்கப்பட்ட (சிப்பஞ்செய்யப்பட்ட) இயற்கையான கனிப்பொருள் நீரை உற்பத்திசெய்து விற்பனை செய்யும் நோக்கத்துக்காக இத்தால் பதிவுசெய்யப்படுகின்றன.

விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும் :.....................................................................................................................
.....................................................................................................................

உற்பத்திசெய்யும் பொறித்தொகுதியின் அமைவிடம் :.....................................................................................................................
.....................................................................................................................

உற்பத்திப் பொருளின் வணிகப் பெயர் :.....................................................................................................................

குறிப்பு.- மேலே குறிப்பிடு செய்யப்பட்ட ஒழுங்குவிதிகளில் ஏற்பாடுகளுள் எவையும் மீறப்படும் பட்சத்தில் பதிவானது இல்லாதாக்கப்படுவதற்கு உட்பட்டதாகும்.

.........................................
பணிப்பாளர் (சுற்றாடலும் தொழில்சார்
சுகாதாரமும் பிரதான உணவு அதிகாரிக்காக.

தேதி :......................

இலச்சினை :

## அட்டவணை III

படிவம் அ

(ஒழுங்குவிதி 5 (3) )

**போத்தலிலடைக்கப்பட்ட (சிப்பஞ்செய்யப்பட்ட) இயற்கையான கனிப்பொருள் நீருக்கான பௌதீக/ இரசாயன மற்றும் நுண்ணுயிரியல்சார் தேவைப்பாடுகள்**

| **பண்பு** | **தேவைப்பாடு** |
|---|---|
| நிறம் ஹேசன் கூறுகள் (ஆகக்கூடியது) | 5 |
| மணம் | ஆட்சேபிக்கப்படத்தக்கதல்ல |
| சுவை | ஆட்சேபிக்கப்படத்தக்கதல்ல |
| கலங்கல் நிலை, என்ரீயூ (ஆகக்கூடியது) | 5.0 |

| | |
|---|---|
| மொத்த கரைக்கப்பட்ட திண்மங்கள், மிகி/லீ (ஆகக்கூடியது) | 1500.0 |
| ஆசனிக்கு, As என்ற வகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.01 |
| கொழுப்பும் எண்ணெயும் | இல்லை |
| கட்மியம், Cd என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.003 |
| சயனைட்டு, CN என்ற வகையாக மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.07 |
| குரோமியம், Cr என்ற வகையாக மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.05 |
| இரசம், Hg என்ற வகையாக மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.001 |
| நிக்கல், Ni என்றவகையாக மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.02 |
| செலனியம் Se என்றவகையாக மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.01 |
| ஈயம் Pb என்ற வகையாக மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.01 |
| செம்பு, Cu என்றவகையாக மிகி/லீ (ஆகக்கூடியது) | 1.0 |
| அந்திமனி Hb என்ற வகையாக மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.005 |
| பேரியம் Ba என்ற வகையாக மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.7 |
| மங்கனீசு Mn என்ற வகையாக மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.5 |
| குளோரைட்டு, Cl என்றவகையாக மிகி/லீ (ஆகக்கூடியது) | 250.0 |
| புளோரைட்டு, F என்றவகையாக மிகி/லீ (ஆகக்கூடியது) | 1.5 |
| நைத்திரேற்று, $NO_3$. என்றவகையாக மிகி/லீ (ஆகக்கூடியது) | 50.0 |
| நைத்திரைற்று, $NO_2$ என்றவகையாக மிகி/லீ (ஆகக்கூடியது) | 3.0 |
| சல்பைட்டு, $H_2S$ என்றவகையாக மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.05 |
| பீனோலிக் சேர்வைகளும் கனிப்பொருள் எண்ணெயும் | இல்லை |
| ஈ. கோளாயும் கொலிபோம்களும் | இல்லை |
| நோயுருவாக்கக்கூடிய அங்கஜீவிகள், | இல்லை |
| அலுமினியம், Al என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.2 |

## அட்டவணை III

படிவம் ஆ

(ஒழுங்குவிதி 11)

போத்தலிலடைக்கப்பட்ட (சிப்பஞ்செய்யப்பட்ட) குடி நீருக்கான பௌதீக, இரசாயன மற்றும் நுண்ணுயிரியல்சார் தேவைப்பாடுகள்

| | |
|---|---|
| நிறம் (ஆகக் கூடியது) ஹேசன் கூறுகள் | 15.0 |
| மணம் | ஆட்சேபிக்கப்படத்தக்கதல்ல |
| சுவை | ஆட்சேபிக்கப்படத்தக்கதல்ல |
| கலங்கல் நிலை, என்ரீயூ (ஆகக்கூடியது) | 5.0 |
| பீஏச் | 6.5 க்கு 8.5 |

| | |
|---|---|
| மொத்த கரைக்கப்பட்ட திண்மங்கள், மிகி/லீ (ஆகக்கூடியது) | 1000.0 |
| குளோரைட்டு, Cl என்றவகையாக மிகி/லீ (ஆகக்கூடியது) | 250.0 |
| கட்டில்லா மீதிக் குளோரீன், $Cl_2$ என்றவகையாக மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.2 |
| மொத்தக் காரமானதன்மை, $CaCO_3$ ஏன்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 200.0 |
| கட்டில்லா அனிமோனியா $NH_3$ என்ற வகையாக மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.06 |
| நைத்திரேற்று, $NO_3$. என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 50.0 |
| நைத்திரைற்று, $NO_2$. என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 3.0 |
| புளோரைட்டு, F என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 1.5 |
| மொத்த வன்மை, $CaCO_3$ என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 250.0 |
| சல்பேற்றுகள், $SO_4$ என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 250.0 |
| குரோம்மியம் Cr என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.05 |
| நிக்கல், Ni என்றவகையாக, மிகி/லீ | 0.02 |
| மொத்த இரும்பு, Fe என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.3 |
| செம்பு, Cu என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 1.0 |
| மங்கனீசு, Mn என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.5 |
| நாகம், Zn என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 3.0 |
| அலுமினியம், Al என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.2 |
| ஆசனிக்கு, As என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.01 |
| கட்மியம், Cd என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.003 |
| ஈயம், Pb என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.01 |
| இரசம், Hg என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.001 |
| செலனியம், Se என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.01 |
| சயனைட்டு, CN என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | 0.07 |
| இரசாயன ஒட்சிசன் தேவை (சீஓடி) மிகி/லீ (ஆகக்கூடியது) | 10.0 |
| பீனோலிக் சேர்வைகள், பெனோலித் ஓஎச். என்றவகையாக, மிகி/லீ (ஆகக்கூடியது) | இல்லை |
| கொழுப்பும் எண்ணெயும், மிகி/லீ (ஆகக்கூடியது) | இல்லை |
| ஈகொலியும் கொலிபோம்களும் | இல்லை |
| நோயுருவாக்கக்கூடிய அங்க ஜீவிகள் | இல்லை |

12-77

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.